Updated on 6 April 2022

# 17 மார்ச் 2022 முதல் எக்சஸ்கோட் எனப்படும் அணுகல் குறியீட்டில் மாற்றம்

## பின்வரும் ஊழியர்களின் எக்சஸ் குறியீடு "சிவப்பு"* நிறமாக மாறும்:

**1 என்டிஜன் விரைவு பரிசோதனை(ART) அல்லது பல்படியத் தொடர்வினை(PCR) பரிசோதனை முடிவின்படி ** தொற்றுநோய் பாதிப்பு உள்ளவர்கள்**

- நீங்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். கொவிட்-19 நோயிலிருந்து குணமடைவதற்கான நெறிமுறையை நீங்கள் நிறைவேற்றிய பிறகுதான் உங்கள் எக்சஸ் குறியீட்டின் நிலை "பச்சை" நிறமாக மாறும்***.



**2 அறவே தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அல்லது பகுதியளவு மட்டுமே தடுப்பூசி போட்டுக்கொண்ட அனைத்து ஊழியர்கள். தொற்று ஏற்பட்ட நாள் முதல், கொவிட்-19 நோயிலிருந்து குணமடைந்து 180 நாள்களுக்கும் மேலான, ஆனால் தடுப்பூசி நிபந்தனைகளை இன்னும் பூர்த்தி செய்யாத ஊழியர்கள் இதில் அடங்குவர்.**

- நீங்கள் முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டிருந்தால் மட்டுமே உங்கள் எக்சஸ் குறியீடு "பச்சை" நிறமாக மாறும். முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர் என்ற நிலையை நீங்கள் தக்கவைத்துக்கொள்ள, திட்டமிடப்பட்டப்படி கூடுதல் பூஸ்டர் தடுப்பூசியை நீங்கள் போட்டுக்கொள்ள வேண்டும்.
- தங்கும் விடுதிகளில் வசிக்கும் ஊழியர்கள், அத்தியாவசிய காரணங்களுக்காக அல்லது பொழுதுபோக்கு நிலையங்களுக்குச் செல்ல (RCs) தங்குவிடுதியை விட்டு வெளியேறலாம். RC வருகைகளுக்கு விண்ணப்பிக்க உங்கள் தங்குவிடுதி நடத்துநரை அணுகவும்.

*உங்கள் எக்சஸ் குறியீடு "சிவப்பு" நிறமாக மாறினால், நீங்கள் வேலைக்குச் செல்லவோ தங்குவிடுதியை விட்டு வெளியேறவோ அனுமதிக்கப்பட மாட்டீர்கள்.

**அறிகுறிகள் இல்லாத மற்றும் சமீபத்தில் குணமடைந்த ஊழியர்கள் தொற்றிலிருந்து குணமடைந்த 90 நாள்களுக்குள் சுய பரிசோதனை செய்யக்கூடாது. இருப்பினும், உங்களுக்கு அறிகுறிகள் ஏதும் இல்லை என்றால், சமீபத்தில் உங்களுக்கு ஏற்பட்ட தொற்று பாதிப்பு சம்பவத்திலிருந்து 28 நாள்களுக்குள் எதிர்பாராதவிதமாக உங்களுக்குத் தொற்று ஏற்பட்டால், தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. மேலும் வேலை உட்பட உங்கள் அன்றாட வாழ்க்கையை நீங்கள் தொடரலாம். உங்களுக்கு உடல் நலமில்லை எனில் மருத்துவரைப் பார்க்க வேண்டும்.

*** தடுப்பூசி நிலை எதுவாயினும் சரி, இது அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும்.

MINISTRY OF MANPOWER